Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 07 (22-12-1992) செவ்வாய்க்கிழமை ஓசை 308

## கிராமசேவகர் நியமனம் பெயர்கள் வெளியாகின

அண்மையில் நடாத்தப்பட்ட கிராமசேவையாளரை நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்ப்பட்டியல் நேற்று யாழ் செயலகம் வந்து சேர்ந்துள்ளது. இப்பெயர்ப் பட்டியல் பரீட்சை ஆணையாளரினால் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன்படி சென்ற மாதம் 30-ம் திகதியில் உள்ளபடியான வெற்றிடங்களை மட்டும் முன்னுரிமை அடிப்படையில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமென யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார். இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதேச செயலர் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது (பா)

# பாரிஸில் பேச்சுவார்த்தை செய்திக்கு புலிகள் மறுப்பு

## போர்நிறுத்தமின்றி பேச்சு இல்லை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் சிறிலங்கா அரசுக்கும் மத்தியில் பாரிஸில் இரகசிய பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்திருப்பதாக கொழும்பு பத்திரிகைகளில் வெளியாகிய செய்திகளுக்கு விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மறுப்புத் தெரிவித்தன. போர் நிறுத்தம் செய்யப்படாமல் விடுதலைப் புலிகள் பேச்சுகளில் பங்குபற்றப் போவதில்லை என இவ் வட்டாரங்கள் மேலும் வலியுறுத்தின

இப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகள் இயக்கத்தினரின் நிலைப்பாட்டை அறிய நீதி, உயர்கல்விஅமைச்சர் ஏ. ஸி.எஸ். ஹமீது வியாழனிரவுபாரிஸ்பயணமாகியுள்ளதாகவும் அவர் அங்கு புலிகள் இயக்கத்தின் பாரிஸ் பேச்சாளர் லோரன்ஸ் திலகர் உட்பட ஏனைய முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும்ஹமீத்துடன்தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில, தமிழ் வாரஏடுகள் சில தெரிவித்துள்ளன.

இவ்வாறு வெளியான செய்திகள் குறித்து விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒருவரிடம் வினவியபோது அரசுடன் பாரிசில் இரகசியப் பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறவில்லை எனவும் போர் நிறுத்தம் செய்யப்படாமல் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் பங்குபற்றப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அனுப்புவதில் தாமதம்

க.பொ.த. சாதாரண தர பரீட்சை விடைத்தாள்கள் நேற்று திட்டமிட்டபடி கொழும்பிற்கு அனுப்பப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை எடுத்துக்கொண்டு லொறி மூலம் யாழ். பிரந்தியக் கல்விப்பணிப்பாளர் பருத்தித்துறைக்குச் சென்றார். அங்கே தரித்து நின்ற கப்பலில் இவ் விடைத்தாள்களை ஏற்றிச் செல்வதற்கான வசதிகள் இல்லாமையால் பணிப்பாளர் இவற்றை மீள எடுத்து வந்தார். இதே வேளை தொண்டர் பயிலுனரின் முன்தேதியிடல் விண்ணப்பங்களை கல்விப்பணிப்பாளரிடம் கையளிப்பதற்காக பருத்தித்துறைக்கு எடுத்துச் சென்ற தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர்,

(4ஆம் பக்கம் பார்க்க)

## மீட்புநிதி சேகரிப்பு நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக இடம் பெற்று வரும் தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாக தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

அன்று காலை 8.30 தொடக்கம் 10.30 வரை யாழ்ப்பாணம், காரைநகர், வேலணை நல்லூர், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயம்.

காலை 11.00 தொடக்கம் 12.00 வரை உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை, காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு மானிப்பாய் மெமோறியல் கல்லூரி

மாலை 2.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை சாவகச்சேரி பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

மாலை 2.00 மணி தொடக்கம் 5.00 மணி வரை கரவெட்டி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு அரச அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

## தெரிவுகுழுவை புறக்கணிப்பது புலிகளுக்கு வாய்ப்பாகிவிடும்

### பிரேமாவின் ஆலோசகர் எச்சரிக்கை

[கொழும்பு]

பாராளுமன்றத்தெரிவுக்குழு முன்வைத்துள்ள சிபாரிசுகள் மூலம் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றி விட்டதாக தமிழ்க் குழுக்கள் குற்றம் சாட்டினாலும், அது பின்நோக்கிய ஒரு நகர்வு என்று அவர்கள் குறிப்பிட்டாலும் பரவாயில்லை. ஆனால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அமர்வுகளை இத்தமிழ்க் குழுக்கள் புறக்கணிக்கக்கூடாது. அவ்வாறு ... வாய்ப்பாகிவிடும் என்று சண்டே ஒப்சேவர் வார இதழில் அநுருத்த திலகசிறி தனது அரசியல் விமர்சனத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் விடுதலைப் புலிகள் ஜே.வி.பி. யினரைப் போன்றவர்கள் அல்ல. அவர்கள் விவேகம் நிறைந்தவர்களும், அரசியல் விளையாட்டில் தேர்ச்சிமிக்கவர்களும் ஆவார்கள்.

... போதும்கூட இந்திய அரசாங்கத்தின் ஒருபகுதியினரிடையே இந்திய நலன்களுக்கு விரோதமானவர்கள் அல்ல என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்த அவர்களால் முடியுமாக இருந்துள்ளது.

எனவேதான் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவது குறித்து விழிப்பாகவும் கவனமாகவும் இருக்கவேண்டியுள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் வாயிலாக ...

## புலிகளைப் பலப்படுத்திய தெரிவுக்குழுவின் தோல்வி

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தோல்வியும் கடந்த வாரம் கொழும்பில் தமிழ்க் குழுக்கள் விடுத்த அறிக்கையும் விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டை ... தென்னிலங்கை அரசியல்வாதிகளால் ஏமாற்றப்பட்டு விட்டதாக தமிழ்க் குழுக்கள் தெரிவிப்பது புலிகளைப் பலப்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாடு மீண்டும் ஒரு முறை விடுதலைப் புலி...

## நத்தார் காலத்தில் யுத்த நிறுத்தம்?

### கிறிஸ்தவ அமைப்பு முயற்சி

(கொழும்பு)

நத்தார் பண்டிகை காலத்தில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு கிறிஸ்தவ அமைப்பொன்று முயன்று வருவதாக கொழும்பு பத்திரிகையொன்று குறிப்பிட்டுள்ளது.

இவ் யுத்த நிறுத்தம் புது வருடம் வரையும் நீடிக்கலாம் என்றும் சிலவேளையில் பின்னரும் நீடிக்கப்படலாம் எனவும் மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் ஏப்ரலில் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்படவுள்ளதாகவும் இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலுடன் இணைந்து பேச்சுவார்த்தையும் யுத்த நிறுத்தமும் மேற்கொள்ளப்படலாம் எனவும், இதனால் ஜனாதிபதி தேர்தல் வரை யுத்த நிறுத்தம் நீடிக்கும் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விஸ்தரிக்கப் பணிப்பு

(கொழும்பு)

வடக்கில் சிவில் நிர்வாக ... ளுக்கு உத்தரவிட்டுள்ளதாக ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# தெரிவுகுழுவை புறக்கணிப்பது புலிகளுக்கு வாய்ப்பாகிவிடும்

## பிரேமாவின் ஆலோசகர் எச்சரிக்கை

[கொழும்பு]

பாராளுமன்றத்தெரிவுக்குழு முன்வைத்துள்ள சிபாரிசுகள் மூலம் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றி விட்டதாக தமிழ்க் குழுக்கள் குற்றம் சாட்டினாலும், அது பின்நோக்கிய ஒரு நகர்வு என்று அவர்கள் குறிப்பிட்டாலும் பரவாயில்லை. ஆனால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அமர்வுகளை இத்தமிழ்க் குழுக்கள் புறக்கணிக்ககூடாது. அவ்வாறு அவர்கள் புறக்கணித்தால் அது விடுதலைப் புலிகளுக்கு வாய்ப்பாகிவிடும் என்று சண்டே ஒப்சேவர் வார இதழில் அநுருத்த திலகசிறி தனது அரசியல் விமர்சனத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் விடுதலைப் புலிகள் ஜே. வி. பி. யினரைப் போன்றவர்கள் அல்ல. அவர்கள் விவேகம் நிறைந்தவர்களும், அரசியல் விளையாட்டில் தேர்ச்சி மிக்கவர்களும் ஆவார்கள்.

இந்திய இராணுவத்துடன் நேருக்குநேர் மோதிக்கொண்ட போதும்கூட இந்திய அரசாங்கத்தின் ஒருபகுதியினரிடையே இந்திய நலன்களுக்கு விரோதமானவர்கள் அல்ல என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்த அவர்களால் முடியுமாக இருந்துள்ளது.

எனவேதான் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவது குறித்து விழிப்பாகவும் கவனமாகவும் இருக்கவேண்டியுள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் வாயிலாகவோ அல்லது வேறெவ்வகை

(4 ஆம் பக்கம் பார்க்க)

பாரிசில் இரகசியப் பேச்சு வார்த்தை எதுவும் நடைபெறவில்லை எனவும் போர் நிறுத்தம் செய்யப்படாமல் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் பங்குபற்றப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

பாளர் இவறன்ற மள் எடுத்து வந்தார். இதேவேளை தொண்டர் பயிலுனரின் முன் தேதியிடல் விண்ணப்பங்களை கல்விப்பணிப்பாளரிடம் கையளிப்பதற்காக பருத்தித்துறைக்கு எடுத்துச் சென்ற தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர்,

(4ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

நத்தார் பண்டிகை காலத்தில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு கிறிஸ்தவ அமைப்பொன்று முயன்று வருவதாக கொழும்பு பத்திரிகையொன்று குறிப்பிட்டுள்ளது.

இவ் யுத்த நிறுத்தம் புது வருடம் வரையும் நீடிக்கலாம் என்றும் சிலவேளையில் பின்னரும் நீடிக்கப்படலாம் எனவும் மேலும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் ஏப்ரலில் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்படவுள்ளதாகவும் இந் நிலையில் ஜனாதிபதி தேர்தலுடன் இணைந்து பேச்சு வார்த்தையும் யுத்த நிறுத்தமும் மேற்கொள்ளப்படலாம் எனவும், இதனால் ஜனாதிபதி தேர்தல் வரை யுத்த நிறுத்தம் நீடிக்கும் எனவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# பிரச்சினைக்கு தீர்வு அதுவே உண்மை வெற்றியாம்

(கொழும்பு)

''தேர்தல் வெற்றிகளை விட வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காணப்படுவதே உண்மையான பெரியவெற்றியாக இருக்கும்'' இவ்வாறு ஜனாதிபதி ஆர். ப்ரேமதாசா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது அடுத்துவரும் பொதுத்தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் என்பது நிச்சயம். ஆனால் இராணுவமும் எனது அரசாங்கமும் எதிர்பார்க்கின்ற மிகப் பெரிய வெற்றி நீண்டகாலமாக இழுபட்டுவரும் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரதீர்வு காணப்படுவதேயாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எமது நாட்டை நாம் பிரிய விடக்கூடாது ஒன்றாக வைத்திருக்க. வேண்டும் நாட்டுமக்கள் அனைவரையும் ஒரே தாய் மக்களைப்போல் வாழ வைக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வில் எமக்கு நம்பிக்கையில்லை. அரசியல் தீர்விலேயே நம்பிக்கை உண்டு. இதன் மூலமே புரிந்துணர்வையும், ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

# புலிகளைப் பலப்படுத்திய தெரிவுக்குழுவின் தோல்வி

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தோல்வியும் கடந்த வாரம் கொழும்பில் தமிழ்க் குழுக்கள் விடுத்த அறிக்கையும் விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டை பலப்படுத்தியுள்ளன என அரசியல் விமர்சகர் தராகி ''சண்டே ஐலண்ட்'' பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளார்.

தாம் மீண்டும் ஒருமுறை தென்னிலங்கை அரசியல் வாதிகளால் ஏமாற்றப்பட்டு விட்டதாக தமிழ்க் குழுக்கள் தெரிவிப்பது புலிகளைப் பலப்படுத்தும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாடு மீண்டும் ஒரு முறை விடுதலைப் புலிகளின் விநியோக மையமாக வளர்ச்சி அடைந்து வருகிறது

இந் நிலையில் 1993 இல்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விஸ்தரிக்கப் பணிப்பு

(கொழும்பு)

வடக்கில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு வசதியாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை விஸ்தரிக்குமாறு கூட்டுப்படைத் தலைமைத் தளகர்த்தா வடக்கிலுள்ள தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்கென விடுதலைப்புலிகளுடன் தொடர்ந்து போரிடுமாறு பணிக்கப்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பீரங்கிப் படகுகளைத் துரத்தி கடற்புலிகள் தாக்குதல்

## நீருந்து விசைப்படகு சேதம்

(கிளாலி)

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று முன் தினம் இரவும் கடற்புலிகளுக்கும், சிறிலங்கா கடற்படைக்கும் இடையில் பலத்த கடற்சண்டை இடம் பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளாலி கடற்பரப்பில் காணப்பட்ட சிறிலங்கா பீரங்கிப் படகுகளையும், ரோந்துப் படகுகளையும் கடற்புலிகளின் ரோந்துப்படகுகள் எதிர்கொண்டு தாக்கியதாகவும், தொடர்ச்சியாகவும், விட்டு விட்டுப் பலதடவைகள் இம் மோதல்கள் இடம் பெற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சண்டையில் கடற்படைக்குச் சொந்தமான அதிவேக நீருந்து விசைப்படகு ஒன்று சேதமடைந்ததைத் தொடர்ந்து கடற்படையினர் பின்வாங்கிச் சென்றனர்

கடற்புலிகளின் தொடர்ச்சியான கடும் தாக்குதலைத் தொடர்ந்து கடற்படையின் ரோந்து நடவடிக்கைகள் தடைப்பட்டதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், நேற்று முன் தினம் இரவு கடற்புலிகளின் பாதுகாப்புடன் கிளாலிப் பாதையூடாக போக்குவரத்து நடைபெற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை, ஆனையிறவு, பூநகரி முகாமிலிருந்து கிளாலி ஆலங்கேணிக் கரைகளை நோக்கி பலத்த ஆட்டலறி எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொண்டதாகவும் தெரிய வருகிறது.

# மேஜர் ஆசீர் வீரச்சாவு

மன்னார் நானாட்டானில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தொடர் காவலரண்கள் மீதான தாக்குதலில் உயிலங்குளத்தில் இடம்பெற்ற மோதலில் மேஜர் ஆசீர் (கணேசபிள்ளை ராஜதுலசிங்கம், கல்லூரி வீதி திருக்கோணமலை) வீரச்சாவு அடைந்தார்,

இவர் 1985-ம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டவர். மக்கள் மனதையும் போராளிகளின் மனங்களையும் தனது இனிய குணத்தினாலும் பண்பினாலும் வென்றவர். தமிழீழத்தில் இவரது கால்கள் படாத இடங்களே இல்லை எனலாம். பாரிய தாக்குதல்களில் பங்கு பற்றி தன்னை ஒரு சிறந்த போராளியாக நிருபித்துக் காட்டியவர்,

1992-ம் ஆண்டு 4-ம் மாதம் கடற்புலிகளோடு தன்னை இணைத்துக் கொண்டவர். இந்தக் குறுகிய காலத்தில் தன்னை ஒரு சிறந்த பயிற்சியாளனாகவும் கனிந்துவமான ஒரு படையணியை உருவாக்கியவனாகவும் நிருபித்துக் காட்டிப் போராளிகளாலும் பொறுப்பாளர்களாலும் நன்மதிப்பைப் பெற்றவர் வடமராட்சியின் பாதுகாப்பிற்கென தனியான ஒரு அணியை பயிற்றுவித்தும் பாதுகாப்பை மேற்கொண்டவர்.



இளமையில்இருந்தே சிறந்த விளையாட்டு வீரனாக விளங்கிய ஆசீர் கடற்புலிகளின் உதைபந்தாட்ட அணியில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சமஷ்டியை ஆதரிப்பதனால் சிங்கள இனம் இன்னலுறும்

## -கெமுனு முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

சமஷ்டியை ஆதரிப்பவர்கள் சிங்கள இனத்தை இன்னல் படுத்தவிரும்புபவர்கள்எனவே சகல சிங்கள மக்களும் இதில் அவதானமாக இருக்க வேண்டும் என 'சிங்கள கெமுனு முன்னணி'' அறிக்கை விடுத்துள்ளது.

மேலும் அவ் அறிக்கையில்; சிங்களவர் பிறந்தநாடு இது தான். அவர்கள் வாழப்போவதும் இங்கு தான், மரணம் அடைவதும், அவர்களின் உடலை அடக்கம் செய்யப் போவதும் ஏன் அவர்களுக்கு மறுபிறப்பு கூட இங்கு தான் நடக்க வேண்டும் என சிங்களவர்கள் விரும்புகின்றனர்.

சமஷ்டி ஆட்சியை வழங்குதல் மூலம் வடக்கு - கிழக்கில் உள்ள சிங்களவர்கள் விரட்டப்படுவார்கள். அது தமிழர் பூர்வீக பிரதேசமாக மாறிவிடும். இந்த நிலையை தடுக்கும் பொருட்டு பல ஆயிரக் கணக்கான சிங்கள இளைஞர்கள் தமது இரத்தத்தை சிந்திக் கொண்டு இருக்கிறார்கள். இந்த இளைஞர்களின் முயற்சி சமஷ்டியின் மூலம் பயனற்றதாகும். எனவே அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேசுவது தற்கொலை முயற்சியாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவோ அல்லது வேறெவ் வழியிலுமோ பேச்சு வார்த்தை நடத்துவது அரசியல் ரீதியாக மட்டுமன்றி பௌதிக ரீதியாகவும் ஒரு தற்கொலை முயற்சியாகவே அமைய முடியும் என்று அநுருத்த திலகசிறி சண்டே ஒப்சேவரில் எழுதியுள்ள தனது அரசியல் விமர்சனத்தில் தெரிவித்துள்ளார்

சிறிலங்கா ஜனாதிபதியின்

( 4 ஆம் பக்க பார்க்க )

# நானாட்டான் மோதலில் 12 படையினர் பலி

[மன்னார்]

மன்னார் நானாட்டான் சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் நானாட்டான் பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவ தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக முன்னர் செய்தி வெளிவந்தது தெரிந்ததே.

தற்போது இறந்த படையினரின் எண்ணிக்கை 12 என சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி தெரித்தது.

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிசளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5588)

### தேவை

பாடல்கள் ஒலிப்பதிவு செய்வதில் அனுபவமுள்ளவர்களும், T V. வீடியோ டெக் திருத்துவதில் அனுபவமுள்ளவர்களும் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். தொடர்பு: "நியூ விக்ரேஸ் எலக்ரோனிக்கொம்பிளெக்ஸ்" B.M C ஒழுங்கை மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (3238)

### பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

தொல்புரம் மத்திய சன சமூக நிலையத்தின் 44ஆம் ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளைபுதன்கிழமை மாலை 6.00மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [24]

## பிக்குகள் அங்கிக்கு 55 கோடி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

பௌத்த பிக்குகள் அணிகின்ற மஞ்சள் அங்கிக்கென அரசினால் ஐம்பத்தைந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் 38 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசும் போது சிறிலங்கா ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

மேலும் பாடசாலைப் பிள்ளைகளின் சீருடைக்கென 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக்குழு

# மலையாக நம்பியவருக்கு மடுவாக மாறியுள்ளது

## பி. பி. ஸி. வர்ணனை

(கொழும்பு)

தெரிவுக்குழுவை மலையாக நம்பி இருந்தவர் கண்களில் இன்று அது மடுவாக காணப்படுகின்றது. இந்த தெரிவுக்குழுவின் முடிவினால் இலங்கை இந்திய ஒப்பந்தம் மீதுஇருந்த சரத்துக்களும் அடித்து செல்லப்பட்டுள்ளன இவ்வாறு பி.பி.சி. தனது கருத்து கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளது.

லண்டனில் இருந்து திடீர் என்று தெரிவுக்குழு முன் தோன்றிய சிறினிவாசன் ஓர் அறிக்கையை வாசித்துவிட்டு மீண்டும் லண்டன் சென்றுள்ளார்.

இவர் சிங்களக் கட்சிகளின் கைக்கூலியாக செயற்பட்டார் என்றதை அவர் மறுத்துள்ளார். தான் சிங்கள அரசியல்வாதிகளால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வையே முன்வைத்ததாகவும் இத் தீர்வுத்திட்டம் தன்னால் தயாரிக்கப்பட்டதாகவும் கூறினார்.

இவ்வாறு பி. பி. சி மேலும் தெரிவித்தது

## வீதிகள் திருத்தம்

இணுவில் பகுதியில் பல ஆண்டுகளாக திருத்தப்படாமலிருந்து குன்றும், குழியுமாக காணப்பட்ட இணுவல் பிரதேச வீதிகளில் பலவும் திருத்தப்பட்டு வருகின்றன.

பெருந் தெருக்கள் திணைக்களமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழமும் இணைந்து இத்திருத்த வேலைகளைச் செய்துவருகின்றன.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| வீரப்பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 28 | 24 |
| — | — |
| 10 | 11 |
| — | — |
| 1972 | 1892 |

### வீரவேங்கை கவியரசி (வனிதா)

(பாலகிருஷ்ணன் கமலசுலோசினி)

4 ஆம் கண்டம், பன்குளம் திருக்கோணமலை

**மண் மறக்குமோ?**

பன்குளத்தினில் நீ பிறந்ததும்!
பள்ளி சென்று நீ பாடம் படித்ததும்!
வன் செயலினால் இடம் பெயர்ந்ததும்!
விசுவமடுவினில் குடியிருந்ததும்!
புன் சிரிப்பொடு "கவியரசி" நீ
புலிப்படையிலே போயிணைந்ததும்!
"சென்றி" உடைத்து நீ பலாலி முகாமிலே
சிங்களப் படை தன்னைச் சாய்த்ததும்!
வென்று வருகையில் நீ விழுந்ததும்!
வீர வேங்கையே! மண் மறக்குமோ?

உன் நினைவில் நனையும்
அப்பா, அம்மா, சகோதரர்,
களத்தில் நிற்கும் - மாமா. தம்பி,
மற்றும் உறவினர், நண்பர்கள்

தகவல்
மாமா

(3831)

## 41-ம் நாள் நினைவஞ்சலி



### வீர[illegible]

(சத்தியகலா அருளன்)

(கடற்புலி மகளிர் படையணி)

வீரச்சாவு 1[illegible]- 11- 1992


எத்தனை எத்தனையோ
இலட்சியக் கனவுகளு டன்
வலம் வந்த நீ
விதி செய்த சதியினால்
காணாமல் போய்விட்டாய்

எரிமலையாய் எழுந்து
பெரும் அலையாய் பொங்கிக்
கொண்டிருந்த உன்னை
நாம் பார்த்திருக்க
உன் கனவுகளை மட்டும்
எம்மிடம் விட்டு இடையில்
சென்றாய்
வேதனையின் கோடுகள்
விடியலின் போது விலகிடும் - அப்போது
ஆனந்தமாய் கடல் ஆர்ப்பரிக்கும் - அந்த
அலையிடையே நீ ஆயிரமாய் தோன்றிடுவாய்

போராளிகள், குடும்பத்தினர்.

(3814)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீர ஜனனம்: | வீரச் சாவு: |
|---|---|
| 28 | 22 |
| \| | \| |
| 03 | 12 |
| \| | \| |
| 1972 | 1890 |

### வீரவேங்கை ஸ்ராலின்

[துரைரட்ணம் - பகீரதன்]

உன் ஆசைகளை துறந்து - மக்கள்
ஆசைகளை பெரிதென எண்ணி
பல களங்கள் கண்டு காவியம் ஆகிய
எம் இனிய பகீரே - நாம்
உள்ளவரை உன் நினைவுகள்
தொடருமடா...

உன் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதர,
சகோதரிகள், உற்றார்,
உறவினர்.

அரியாலை,
யாழ்ப்பாணம்.

(3818)

## நினைவு கூருகின்றோம்... 1992-12-22

1984-ம் ஆண்டு இத்தினத்தில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொலலப்பட்ட தொண்டமானாற்றைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியரான தமிழ்ப் பொதுமகன்.

1985-ம் ஆண்டு அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினரின் முற்றுகையின்போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய-

★ அபுஸ்லோன் கிறைசன் (அக்கரைப்பற்று)

★ மூர்த்தி (கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி-அட்டப்பள்ளம்-)

1986-ம் ஆண்டு, மட்டக்களப்பு வந்தாறு மூலைப் பகுதியில், சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

யோகன்/சரத் (செபஸ்தியன் யோகராசா-வந்தாறு மூலை-மட்டு)

மில்டன் (சிங்கராசா திலகன் - வந்தாறுமூலை - மட்டு)

இதே சம்பவத்தின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

ஈசன் (சாமித்தம்பி இரத்தினசிங்கம் வந்தாறுமூலை-மட்டு)

1987-ம் ஆண்டு கோண்டாவில் காரைக்கால் பகுதியில் இந்தியப்படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

லெப்.குமார் (செல்வநாயகம் சிவகுமார் (சிவா) இலங்கேஸ்வரன் வீதி, கோண்டாவில் வடக்கு-யாழ்)

1988-ம் ஆண்டு காங்கேசன்துறைப்பகுதியில், இந்தியப்படையினர் மற்றும் ஈ.பி ஆர் எல்.எவ். தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

# நீங்காத நினைவலைகள்

...ன்ற மஞ்சள் அணிக்கென அரசினால் ஐம்பத்தைந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதனை ஐக்கிய தேசியக் கட்சியின் 38 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசும் போது சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

மேலும் பாடசாலைப் பிள்ளைகளின் சீருடைக்கென 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

...பனைகுளத்தினில் நீ பிறந்ததும்!
பள்ளி சென்று நீ பாடம் படித்ததும்!
வன் செயலினால் இடம் பெயர்ந்ததும்!
விசுவமடுவினில் குடியிருந்ததும்!
புன் சிரிப்பொடு "கவியரசி" நீ
புலிப்படையிலே போயிணைந்ததும்!
"சென்றி" உடைத்து நீ பலாலி முகாமிலே
சிங்களப் படை தன்னைச் சாய்த்ததும்!
வென்று வருகையில் நீ விழுந்ததும்!
வீர வேங்கையே! மண் மறக்குமோ?

உன் நினைவில் நனையும்
அப்பா, அம்மா, சகோதரர்,
களத்தில் நிற்கும் - மாமா, தம்பி,
மற்றும் உறவினர், நண்பர்கள்

தகவல்
மாமா

(3831)

---

இலட்சியக் கனவுகளுடன்
வலம் வந்த நீ
விதி செய்த சதியினால்
காணாமல் போய்விட்டாய்

எரிமலையாய் எழுந்து
பெரும் அலையாய் பொங்கிக்
கொண்டிருந்த உன்னை
நாம் பார்த்திருக்க
உன் கனவுகளை மட்டும்
எம்மிடம் விட்டு இடையில்
சென்றாய்

வேதனையின் கோடுகள்
விடியலின் போது விலகிடும் - அப்போது
ஆனந்தமாய் கடல் ஆர்ப்பரிக்கும் - அந்த
அலையிடையே நீ ஆயிரமாய் தோன்றிடுவாய்

போராளிகள், குடும்பத்தினர்.

(3814)

---

# நீங்காத நினைவலைகள்



**வீரவேங்கை ஸ்ராலின்**

(துரைரட்ணம் பகீரதன் - அரியாலை)

கட்டுவனில் ஸ்ரீலங்காஇராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவடைந்தார்

தாயின் மடியில்: 28. 03. 1972
தாயக மண்ணில்: 22. 12 1990



**கப்டன் ரமேஸ்**

(புவனேந்திரன்சிறீரமணன்அரியாலை)

பூநகரி பள்ளிக்குடா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவடைந்தார்

தாயின் மடியில்: 24 08. 1970
தாயக மண்ணில்: 20. 11. 1991



**லெப். சுது**

(சதானந்தன் நிர்மலநாத் -அரியாலை)

மட்டு - ஆரையம்பதியில் இலங்கை அதிரடிப்படையினருடனான மோதலில் வீரச்சாவடைந்தார்

தாயின் மடியில்: 26 02. 1968
தாயக மண்ணில்: 24. 12. 1986

மண்ணின் மைந்தர்களாக மரணித்த மாவீரர்களே!
எங்கள் மண்ணில் நீங்கள் சிந்திய
செங்குருதித் துளிகள் ஒவ்வொன்றும் விதைகளாகவே வீழ்ந்தன!
வீழ்ந்த விதைகள் ஒவ்வொன்றும் முளைவிட்டு வளர்ந்து இன்று
கிளைவிட்டு நிற்கின்றன - மரணித்த வேங்கைகளே நீங்கள்
விளக்கு ஒளியில் விழுந்து மடிந்த விட்டில்கள் அல்ல!
சுதந்திர கீதம் இசைதத விடியலின் பறவைகள் - நீங்கள்
சிந்திய குருதியில் நாளை தமிழீழம் அமைவது உறுதி!

**"இலட்சிய வேங்கைகள் இறப்பதும் இல்லை
விடுதலைப் புலிகள் வீழ்வதும் இல்லை"**

**அரியாலை**

**- நண்பர்கள்**

(3824)

---

...டப்பள்ளம்-)

1986-ம் ஆண்டு, மட்டக்களப்பு வந்தாறு மூலைப் பகுதியில், சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

யோகன்/சரத் [செபஸ்தியன் யோகராசா-வந்தாறு மூலை-மட்டு]

மில்டன் (சிங்கராசா திலகன் - வந்தாறுமூலை - மட்டு)

இதே சம்பவத்தின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

ஈசன் (சாமித்தம்பி இரத்தினசிங்கம் வந்தாறுமூலை-மட்டு)

1987-ம் ஆண்டு கோண்டாவில் காரைக்கால் பகுதியில் இந்தியப்படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

லெப். குமார் (செல்வநாயகம் சிவகுமார் [சிவா] இலங்கேஸ்வரன் வீதி, கோண்டாவில் வடக்கு-யாழ்)

1988-ம் ஆண்டு காங்கேசன்துறைப்பகுதியில், இந்தியப்படையினர் மற்றும் ஈ.பி ஆர் எல்.எவ். தேசவிரோதிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

கப்டன் அன்பு [பத்திநாதர் அமலராஜன் - சவரியோடை, மயிலிட்டி-யாழ்]

பலாச்சோலைப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

லெப். தவம் (ஞானமுத்து தவராசா-களுவங்கேணி-மட்டக்களப்பு]

யாழ். திக்கம் பகுதியில், இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கரவெட்டி-தேவரையாளி வாசியான பனம் பொருள் அபிவிருத்திச்சபை ஊழியரான தமிழர்.

1990-ம் ஆண்டு கட்டுவன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

சாம்சன் (செல்வநாயகம் செல்வச்சந்திரன் - ஏழாலை வடக்கு-யாழ்.)

ஸ்ராலின் (துரைரட்ணம் பகீரதன் 170/2. கண்டி வீதி, அரியாலை-யாழ்.)

அலன் (குருசாமி ஜீவராசா-விசுவமடு-முல்லைத்தீவு)

கப்டன் ஆஷா (பத்மாவதி (கலா) நடராசா - 148, ஜெயவர்த்தனாவீதி, [நாயன்மார்கட்டு-யாழ்.)

ரமா (லோகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை-புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

ரதிகலா (சுகந்தினி கனகரட்ணம்-குடத்தனை வடக்கு -யாழ்)

கப்டன் அஜித்தா (சுகுணராணி கந்தையா-வரதன் இல்லம்; சுகுணராணி வீதி, அரசடி, சங்கத்தானை, சாவகச்சேரி-யாழ்)

மட்டக்களப்பு-மகிழடித்தீவில், சிறிலங்கா இராணுவத்தினருடன் நின்ற தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட ஆரையம்பதிவாசியான தமிழ்வயோதிபர்

1991-ம் ஆண்டு ஆவரங்கால்ப் பகுதியில் நிகழ்ந்த தற்செயலான வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

ஆனந்தன் (விவேகானந்தன் விக்கினதாசன் நவிண்டில் வடமராட்சி யாழ்.)

சபேசன் (நவரட்ணம் உதயகுமார்-குமுழமுனை, முள்ளியவளை-முல்லைத்தீவு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5624)

சிந்தனைக்கு

இடுப்பு ஒடிந்த கோழிக்கு
உரக் குழியே கைலாசம்
— தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 22- 12- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05

## 'இடதுசாரியின்' பேரினவாதபோதனை

"சிங்களத் தலைவர்கள் ஏமாற்றி விட்டதாக தமிழ்க் குழுக்கள் குற்றம் சாட்டினாலும், தெரிவுக் குழுவின் தீர்மானம் பின் நோக்கிய நகர்வு என்று அவர்கள் குறிப்பிட்டாலும் பரவாயில்லை. ஆனால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அமர்வுகளை தமிழ்க் குழுக்கள் புறக்கணிக்கக் கூடாது. அவ்வாறு அவர்கள் புறக்கணித்தால் அது விடுதலைப் புலிகளுக்கு வாய்ப்பாகி விடும்" இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகரான அநுருத்த திலகசிறி "சண்டே ஒப்சேபர்" பத்திரிகையில் எழுதியுள்ள தனது அரசியல் விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அநுருத்த திலக சிறியின் 'புத்திமதிகளை'த் தமிழ்க் குழுக்கள் ஏற்றுக் கொள்வார்களா? ஏற்றுக் கொள்ள மாட்டார்களா? என்பதல்ல இங்கு பிரச்சினை. ஏனெனில் தமிழ்க் குழுக்களின் துரோகத்தனம் அவ்வாறானது. அவர்கள் தமது அரசியல் அபிலாசைகளுக்காக எதையும் செய்வதற்குத் தயாராக உள்ளவர்கள். இதனால் தான் அநுருத்த திலகசிறியும் இவ்வாறானதொரு புத்திமதியைத் தெரிவிக்கக் கூடியதாகவும் இருந்தது.

ஆனால், தன்னை ஒரு இடதுசாரி யெனவும், முற்போக்கானவன் எனவும் தெரிவித்துக் கொண்டிருக்கும் அநுருத்த திலகசிறி தமிழ்க் குழுக்களுக்குப் பிரச்சினையை தீர்க்காத பிற்போக்கானது என்றாலும் பரவாயில்லை, ஏமாற்றம் அளிப்பதானாலும் பரவாயில்லை, சிங்களக்கட்சிகள் போட்ட பிச்சையைத் தமிழ்க்குழுக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும் எனத் தெரிவித்துள்ளமைசிங்களப்பேரின வாதத்தினதும், அடக்குமுறையாளரினதும் ஒரு சின்னமாக எந்தளவிற்குஇவ் 'இடதுசாரி' மாறியுள்ளார் என்பதையே காட்டுவதாக உள்ளது.

அநுருத்த திலகசிறியின் மேற்கூறிய கருத்தானது தமிழ்க் குழுக்களை ஒரு வகையில் 'மிரட்டும்' பாணியில் அமைந்துள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை. தமது இனத்தைக் காட்டிக் கொடுத்தவர்களுக்கு பேரினவாதம் வழங்கும் பரிசாகவும் இதனைக் கொள்ளலாம். அத்தோடு, தமிழ்க்குழுக்களின் அவல நிலையையும், போக்கிடமின்மையையும் அவர்கள் சரியாக உணர்ந்துள்ளதாகவும் கூறலாம்.

# 'புக்காரா' விமானக் கொள்வனவு; அரசாங்கத்தின் அக்கறை ஏன்?

ஆர்ஜன்ரீனாவிலிருந்து இரட்டை இயந்திரங்கள் இணைக்கப்பட்ட தரைத் தாக்குதல் விமானங்களைக் கொள்வனவு செய்யச் சிறிலங்கா அரசு மேற்கொண்ட முடிவு கடும் கண்டனத்துக்குள்ளாகி இருப்பதாகத் தெரிகிறது.

சிறிலங்கா அரசு பபிரிக்கா, ஆர்ஜன்ரீனா, டி மற்ரீயல்ஸ் ஏரோஸ்பசிக்கல்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து நான்கு ஐ ஏ 58 ஏ புக்காரா ரக விமானங்களை வாங்குவதென முடிவெடுத்ததைத் தொடர்ந்து எதிர்ப்பு உருவாகியுள்ளது. ஆர்ஜன்ரீனா விமானப் படையின் கட்டுப்பாட்டிலுள்ள இந்த நிறுவனத்திடமிருந்து புக்காரா விமானங்களைக்கொள்வனவு செய்வது என்பதில் அரசு உறுதியாக இருக்கிறது. இதில் பிரச்சினை என்னவென்றால், அரசு முன்னதாக பிரேசில் தயாரிப்பான ஆறு ரி.ஜி.ஏ ஏ பயிற்சி தரைத் தாக்குதல் விமானங்களை வாங்குவதென்று எடுத்திருந்த முடிவை மாற்றியே தனக்கு சாதாரண தாக்குதல் விமானங்களை வாங்குவதென்று முடிவு செய்தது. இந்த விமானங்களின் தயாரிப்பு ஆர்ஜன்ரீனாவில் ஆறு வருடங்களின் முன் கைவிடப்பட்டுள்ளது

ஆறு ரி, ஜி. ஏ ஏ. ரகப் பயிற்சி தாக்குதல் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கென்று சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு இவ்வாண்டு ஆகஸ்ட் 24இல்உள்ளூர், வெளியூர் நிறுவனங்களிலிருந்துகேள்விப்பத்திரங்களைக்கோரியிருந்தது. அரசுக் கட்டுப்பாட்டுப் பத்திரிகையில் வெளியான இந்தப் பாதுகாப்பு அமைச்சு விளம்பரத்தில் கேள்விப் பத்திரங்கள் செப்ரெம்பர் 16 பிற்பகல் 2 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனத்தெரியப் படுத்தியிருந்தது.

ஆனால் கேள்விப் பத்திரத்தை ஏற்றுக் கொள்ளும் காலக்கெடு இருமுறை பிற்போடப்பட்டது இறுதியாகக் கேள்விப் பத்திரங்களை ஏற்கும் கடைசித் திகதி ஒக்டோபர் 16 என்று தெரிவிக்கப்பட்டது.

பல விசாரணைகளை மேற்கொண்டதன் பிறகு அரசின் விருப்பம் இப்போது பிறேசிலின் உற்பத்தியிலிருக்கும் துக்கானா விமானம் பக்கம் திரும்பியது இது ரிஜிஏஏ முதல்தரத் தயாரிப்பாகும். எகிப்து ஈராக், றோயல் விமானப் படைகளில் இந்த ரக விமானங்கள் இன்னும் பாவனையில் உள்ளன. இவை இறங்குவதற்கெனத் தயாரிக்கப்படாத ஒரு பாதைகளில் இறங்கக் கூடியவை அத்துடன் இராணுவ நடவடிக்கைக்கு உகந்தவை நின்ற இடத்திலிருந்து திடீரெனப் பறக்கக் கூடிய தன்மையுடையவை.

எகிப்து இந்த ரக விமானங்களில் நாற்பது விமானங்களைக் கொள்வனவு செய்வதாக முதலில் ஒப்பந்தம் செய்து கொண்டது பின்பு மேலதிமாக விமானங்களை எகிப்து கேட்டுள்ளது என்று மேற்கத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆர்ஜன்ரீனா, ஹெண்டுரஸ், ஈரான். பராக்குவே, பேரு வெனிசுலா மற்றும் நாடுகளிலும் அதனதன்விமானப்படைகளில் இந்த பிரேசில் தயாரிப்பு விமானங்களே பாவனையில் உள்ளன. பிரித்தானியாவும் இந்த ரக விமானங்களைக் கொள்வனவு செய்வது பயன் பொருத்தமாகஇருக்குமென்று எண்ணுவதாக சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேற்குறிப்பிட்ட நாடுகளில் மாத்திரம் பிரேசிலில் தயாரிக்கப்பட்ட சுமார் 500 துக்கானா விமானங்கள் உபயோகத்தில் உள்ளன

இது இப்படியிருக்க, சுவிஸ் தயாரிப்பான பிசி-7 விமானங்கள் பற்றியும் சிறிலங்கா அரசு விசாரணைகள் மேற்கொண்டதாகத் தெரியவருகிறது இந்த பிசி-7 ரக விமானங்கள் அங்கோலா, அவுஸ்திரேலியா உள்ளிட்டபத்துநாடுகளில்பாவனையில் உள்ளன. இந்த விமானங்கள் அமெரிக்க இராணுவ தரத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டவையாகும்.

ஆனால் சிறிலங்கா அரசு இறுதியாக ஆர்ஜன்ரீனாவில் தயாரிக்கப்பட்ட ஐ.ஏ. 58 ரக விமானங்களில் நான்கினைக் கொள்வனவு செய்வதாகத் தீர்மானித்தது. இந்த விமானங்களின் கொள்விலை 11 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும்.(சுமார் 484 000,000 ரூபா) இத் தகவலை பிரதம மந்திரியும் பாதுகாப்பு அமைச்சருமான டி.பி. விஜயதுங்கா வெளியிட்டார்.

பிரான்சு நாட்டுச்செய்தி நிறுவனமொன்றின் செய்தி அறிக்கையின்படி, ஆர்ஜன்ரீனா நாட்டு விமானப் படைத் தளபதி ஜோஸ் யூலியா இந்த நான்கு விமானங்களுக்கான உதிரிப் பாகங்களைத் தருவதோடு அதன் பராமரிப்பையும் ஏற்றுள்ளார் என்பது ஊர்ஜிதமாகியது இவர், இந்த விமானங்களின் விலை 10-11 மில்லியன் அமெரிக்க டாலர் என்று தெரிவித்திருந்தார்.

ஆனால் சில தரப்புகள் தெரிவித்த கருத்துப்படி இந்த விமானங்களின் விலை மேலும் அதிகமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது விமானங்களின் விலை 70 மில்லியன் அமெரிக்க டாலர் என்று தெரிய வருகிறது. [சுமார் 3.080,000,000 ரூபா]

புக்காரா ரக விமானங்களைத் தயாரிப்பதை ஆர்ஜன்ரீனா அரசு 1986இல் கைவிட்டுள்ளது என்பதை சிறிலங்கா அரசே ஒத்துக்கொண்டுள்ளது.

பல எதிர்ப்புகள் மத்தியிலும் புக்காராவிமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் சிறிலங்கா அரசுக்கும் ஆர்ஜன்ரீனா நிறுவனத்துக்கும் இடையில் நவம்பர் 19இல் கொழும்பில் கைச்சாத்தாகியது.

புக்காரா தற்சமயம் உற்பத்தியில் இல்லை என்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் குணரெட்னாவின் நிலைப்பாடாகும். 1986இல் இந்த விமானத்தின் உற்பத்தியை ஆர்ஜன்ரீனா நிறுத்தி விட்டது என்று பாராளுமன்றத்தில் பிரதம மந்திரி கூறியதைத் தொடர்ந்து குணரெட்னா வெளியிட்ட கருத்து உறுதியாகிவிட்டது.

[தொடரும்]

## இன்றைய சூழ்நிலையில் நிலவும்
# உணவுப் பற்றாக் குறையும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும்

2

புதிதாக பிறந்த குழந்தைகளுக்குத் தாய்ப்பாலைப் போன்று வேறு எதுவுமே இல்லை. குழந்தை பிறந்தவுடன் தாயின் பால் சற்றுக் குறைந்து காணப்பட்டாலும் பின்பு குழந்தை பால் குடிக்கத் தொடங்க பாலின் உற்பத்தியும் பெருகும்.

குழந்தை பிறந்தவுடன் தாயின் பாலை கொலஸ்ட்ரம் (Colostrum) என்பார்கள் முதல் மூன்று தொடக்கம் ஆறு நாட்கள் வரை சுரக்கும் இப்பாலில் அதிகளவு புரதச் சத்தும், குறைந்தளவு லக்டோசு வெல்லமும், விட்டமின்களும் இருப்பதால் இது குழந்தைக்கு மிக முக்கியமானதாகும். எனவே குழந்தை பிறந்தவுடன், 'குழந்தையின் வயிற்றைக் காய விட வேண்டும்' என்கிற மூட நம்பிக்கையை விட்டு எவ்வளவுக்கு விரைவாக தாய்ப்பால் கொடுக்க முடியுமோ அவ்வளவுக்கு விரைவாகத் தாய்ப்பாலைக் கொடுக்க வேண்டும் மேலும் தாய்ப்பாலில் 'இமியூனோ குளோபியுலின்', 'லைஸோ

லாம் நாட் செல்லச் செல்ல அளவையும் கூட்டலாம் குழந்தைக்கு நான்கு மாதங்களாகும் போது மேற்கூறியவற்றுடன் சுலபமாகத் தயாரிக்கக் கூடிய 'பொரியரிசி மாவும்' கொடுக்கலாம் இதனைப் பின்வருமாறு தயாரிக்கலாம். ஒரு கிலோ இராம் மாவு தயாரிப்பதற்கு பொரியரிசி மா (65 வீதம்) - 650 கிராம். $2\frac{1}{2}$ சுண்டு (வெட்டியது) குத்தரிசியைக் கழுவிக் காய வைத்து சட்டியில் போட்டு அடுப்பில் வைத்தால் அது வெடித்து

ளின் பின்னர் 100 கிராம் உழுத்தம் பருப்பு கிடைக்கும். இவை மூன்றும் நன்றாகக் கலக்கப்பட்டு துப்பரவாக நன்கு அரைக்கப்பட வேண்டும் திருகைக் கல்லிலும் திரித்துக் கொள்ளலாம். 1 - 2

டைகளாகச் செய்து உண்ணலாம். சீனி, தேங்காய் பால், வாழைப்பழம் சேர்ப்பதால் உப உணவின் தரமும், சக்தியும் கூட்டப்படுகின்றது. கடைகளில் 'செரிலக்' (Cerelac), 'நெஸ்ரம்' Nestum), 'பார்லீன்' (Farlene), 'பாரெக்ஸ்' (Farex) என கிடைக்கின்றன. ஆனால் கொழும்பிலும், வெளிநாட்டிலும் தயாரிக்கப்பட்டு அழகிய டின்களிலும், பக்கெட்டுக்களிலும் அடைக்கப்பட்டவை. அதனால் விலையும் அதிகம்.

தொடங்குவது நல்லது. வீட்டில் கிடைக்கும் பருப்பு வகைகளில் ஒன்று அவரை, கிழங்கு, கரட், தக்காளி, அத்துடன் கட்டாயமாக ஒரு இலை வகையுடன் வெங்காயம், உப்பு சேர்த்து அவித்து வடிக்கலாம். இதில் 1 - 2 அவுன்ஸ் (30 - 60 மி. லீற்றர்) கொடுக்கத் தொடங்கலாம். பின் காலம் செல்லச் செல்ல சூப்பை அவிக்கும்போது சிறிதளவு மீன் அல்லது இறைச்சி அல்லது நெத்தலிக் கருவாடு

முற்போக்கானவன் எனவும் தெரிவித்துக் கொண்டிருக்கும் அநுருத்த திலகசிறி தமிழ்க் குழுக்களுக்குப் பிரச்சினையை தீர்க்காத பிற்போக்கானது என்றாலும் பரவாயில்லை, ஏமாற்றம் அளிப்பதானாலும் பரவாயில்லை, சிங்களக்கட்சிகள் போட்ட பிச்சையைத் தமிழ்க்குழுக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும் எனத் தெரிவித்துள்ளமைசிங்களப்பேரின வாதத்தினதும், அடக்குமுறையாளரினதும் ஒரு சின்னமாக எந்தளவிற்குஇவ் 'இடதுசாரி'மாறியுள்ளார் என்பதையே காட்டுவதாக உள்ளது.

அநுருத்த திலகசிறியின் மேற்கூறிய கருத்தானது தமிழ்க் குழுக்களை ஒரு வகையில் 'மிரட்டும்' பாணியில் அமைந்துள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை. தமது இனத்தைக் காட்டிக் கொடுத்தவர்களுக்கு பேரினவாதம் வழங்கும் பரிசாகவும் இதனைக் கொள்ளலாம். அத்தோடு, தமிழ்க்குழுக்களின் அவல நிலையையும், போக்கிடமின்மையையும் அவர்கள் சரியாக உணர்ந்துள்ளதாகவும் கூறலாம்.

அநுருத்த திலகசிறி கூறினால் என்ன கூறாவிட்டால் என்ன? தமிழ்க் குழுக்களின் அரசியல் எதிர்காலம் அற்றவர்கள் தான். தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் இனத் துரோகிகளாகவும், காட்டிக் கொடுப்பவர்களாகவும் உள்ளவர்களை மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. அத்தோடு, சிங்களப் பேரினவாத சக்திகளிடம் 'இரந்து பெறும்' பிச்சை தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடப் போவதுமில்லை. இந்நிலையில், அவர்களின் அரசியல் எதிர்காலம் குறித்து எவரும் சந்தேகப்படத் தேவையில்லை.

ஆனால், அநுருத்த திலகசிறியின் கோரிக்கையானது உயிர் வாழ விரும்பினால் உன் மனைவியைக் கொடுத்து விடு எனக் கேட்பதற்கு ஒப்பானதாகும். இதில் தமிழ்க்குழுக்கள் எவ்வாறு நடந்து கொள்ளப் போகின்றன என்பது பற்றிய சர்ச்சை எவ்வாறு இருப்பினும், அநுருத்த திலகசிறியின் கோரிக்கை கேவலமானதுமாகும் என்பதில் எவரும் சந்தேகப்பட ஏதுமில்லை.

ஆனால், திலகசிறியின் இக்கோரிக்கையினாலோ, தமிழ்க் குழுக்களின் முடிவினாலோ இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்விலோ அன்றி போர் முனையிலோ மாற்றம் ஏற்பட்டுவிடப் போவதில்லை. இனப்பிரச்சினையின் தீர்வு ஏற்புடையது என்பதை தெரிவிக்க வேண்டியவர்கள் தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளுமே ஒழிய வேறு ஒருவரும் அல்ல.

ஆனால் தமிழ்க் குழுக்களை திலகசிறி மிரட்டுவதென்பது அவர்களுக்கு அச்சம் ஊட்டக்கூடியதே. இருப்பினும் தமிழ்க் குழுக்களால் என்ன செய்ய முடியும். 'பாவம்' அவர்கள். ஆனால், அவர்களுக்கு இது ஒரு பாடம். துரோகிகளை எப்பொழுதும் எவரும் பாதுகாப்பதில்லை என்பதை இதன் மூலமாவது புரிவார்களா? அவ்வாறு புரிந்து கொள்ள அவர்களுக்கு சுய புத்தி உண்டா? இருந்தால், இது வரையிலான வரலாற்றுத் துரோகத்தை இவர்கள் புரிந்திருப்பார்களா? ஆனால், இவர்கள் இதைப் புரிந்து கொள்ளமாட்டார்கள். புரிந்து கொண்டாலும் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஏனெனில் அரசியலில் கிடைக்கும் அற்ப சுகங்களுக்காக எதையும் செய்யத் தயாராகவுள்ளனர்.

# ஏற்படக்கூடிய ஆபத்துக்களும்

2

...பெருகும்.

குழந்தை பிறந்தவுடன் தாயின் பாலை கொலஸ்ட்ரம் (Colostrum) என்பார்கள் முதன் மூன்று தொடக்கம் ஆறு நாட்கள் வரை சுரக்கும் இப்பாலில் அதிகளவு புரதச்சத்தும், குறைந்தளவு லக்டோசு வெல்லமும், விட்டமின்களும் இருப்பதால் இது குழந்தைக்கு மிக முக்கியமானதாகும். எனவே குழந்தை பிறந்தவுடன், 'குழந்தையின் வயிற்றைக் காய விட வேண்டும்' என்கிற மூட நம்பிக்கையை விட்டு எவ்வளவுக்கு விரைவாக தாய்ப்பால் கொடுக்க முடியுமோ அவ்வளவுக்கு விரைவாகத் தாய்ப்பாலைக் கொடுக்க வேண்டும் மேலும் தாய்ப்பாலில் 'இமியூனோ குளோபியுலின்', 'லைஸோசைம்', 'லக்டோஸ்பெரின்' போன்ற இன்னும் பல காரணிகள் உண்டு. முதன் மூன்று மாதங்களுக்கு தாய்ப்பால் மாத்திரமே போதுமானது. பின்பு, நான்காவது மாதத்திலிருந்து 'பொரி அரிசித் தண்ணீர்', 'எலுமிச்சப் பழச்சாறு, வாழைப்பழம், பப்பாசிப்பழம் என்பவற்றை மசித்து ½ தேக்கரண்டிகொடுக்கலாம். மல்ரி விட்டமின் 2 துளிகள் என்பவற்றைக் கொடுக்கலாம். இது குழந்தைகளில் மலச்சிக்கலையும் தடுக்கும். சில காலம் செல்ல அரை அவியல் முட்டையும் கொடுக்கலாம் நாட் செல்லச் செல்ல அளவையும் கூட்டலாம். குழந்தைக்கு நான்கு மாதங்களாகும் போது மேற்கூறியவற்றுடன் சுலபமாகத் தயாரிக்கக் கூடிய 'பொரியரிசி மாவும்' கொடுக்கலாம். இதனைப் பின்வருமாறு தயாரிக்கலாம். ஒரு கிலோ கிராம் மாவு தயாரிப்பதற்கு பொரியரிசி மா (65 வீதம்) - 650 கிராம். 2½ சுண்டு (வெட்டியது) குத்தரிசியைக் கழுவிக் காய வைத்து சட்டியில் போட்டு அடுப்பில் வைத்தால் அது வெடித்து பொரியரிசியாகும். சோயா மா (25 வீதம்) - 330 கிராம் ¾ சுண்டு சோயா பருப்பை நீரில் ஊற வைத்து மறுநாள் காலை தோல் நீக்கிக் கழுவி, வெய்யிலில் நன்குகாய வைத்த பின் சட்டியில் இட்டு நன்றாக வறுத்தெடுத்தல் 330 கிராம் சோயாவை எடுத்தால் கழிவுகளின் பின் 250 கிராம் சோயா பருப்பு கிடைக்கும். உழுந்தம் மா (10 வீதம்) - 115 கிராம் (¼ சுண்டு) முழு உழுந்தை நன்கு வறுத்து, இரண்டாக உடைத்து கோதை நீக்கி வைக்கவும். இதிலும் கழிவுகளின் பின்னர் 100 கிராம் உழுத்தம் பருப்பு கிடைக்கும். இவை மூன்றும் நன்றாகக் கலக்கப்பட்டு துப்பரவாக நன்கு அரைக்கப்பட வேண்டும் திருகைக் கல்லிலும் திரித்துக் கொள்ளலாம். 1 - 2 கரண்டி அரிசி - சோயா - உழுந்து மாவுக் கலவையை சீனியுடன் கலந்து சுடுநீர் அல்லது பாலுடன் சேர்த்துக் களி போலச் செய்து கரண்டியி

**சீர்மாறன்**

னால் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம் வளர்ந்த பிள்ளைகளும், பெரியவர்களும் தேவையானளவு மாவுக் கலவையுடன் தேங்காய்த் துருவல், சீனி, சுடுநீர் அல்லது பால் அல்லது வாழைப்பழம் சேர்த்துப் பிசைந்து உருண்டைகளாகச் செய்து உண்ணலாம். சீனி, தேங்காய், பால், வாழைப்பழம் சேர்ப்பதால் உப உணவின் தரமும், சக்தியும் கூட்டப்படுகின்றது. கடைகளில் 'செரிலக்' (Cerelac), 'நெஸ்ரம்' (Nestum), 'பார்லீன்' (Farlene), 'பாரெக்ஸ்' (Farex) என கிடைக்கின்றன. ஆனால் கொழும்பிலும், வெளிநாட்டிலும் தயாரிக்கப்பட்டு அழகிய டின்களிலும், பக்கெட்டுக்களிலும் அடைக்கப்பட்டவை. அதனால் விலையும் அதிகம். ஆனாலும் உள்ளூரில் தயாரிக்கப்படும் பொரியரிசி மாக்களை விட சத்துக்களும் அதிகம் இல்லை. குழந்தைகளுக்கு 5 மாதமாகும் போது முன்பு கூறிய உணவுகளைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். அத்துடன் சோறு வடித்த கஞ்சி மிக நல்லது. தினமும் கொடுக்கலாம். ரஸ்க் (Rusk), பிஸ்கட் என்பவற்றைத் தூளாக்கி சிறிதளவு கொதிநீர் அல்லது பாலுடன் கரைத்துக் கொடுக்கலாம். இவ்வயதில் சூப்பும் (Soup) கொடுக்கத் தொடங்குவது நல்லது. வீட்டில் கிடைக்கும் பருப்பு வகைகளில் ஒன்று அவரை, கிழங்கு, கரட், தக்காளி, அத்துடன் கட்டாயமாக ஒரு இலை வகையுடன் வெங்காயம், உப்பு சேர்த்து அவித்து வடிக்கலாம். இதில் 1 - 2 அவுன்ஸ் (30 - 60 மி. லீற்றர்) கொடுக்கத் தொடங்கலாம். பின் காலம் செல்லச் செல்ல சூப்பை அவிக்கும்போது சிறிதளவு மீன் அல்லது இறைச்சி அல்லது நெத்தலிக் கருவாடு சேர்த்துக் கொள்ளலாம். நன்றாக குடிக்கத் தொடங்க சூப்பில் உள்ளவற்றை மசித்தும் ஊட்டலாம். அத்துடன் அவித்த முட்டை வெள்ளைக் கருவும் சேர்த்தும் கொடுக்கலாம். எனவே இவ் வயதில் ஒரு குழந்தை பாலுடன் பழரசம், வாழைப்பழம், பப்பாசிப்பழம் பொரியரிசி மாக்கலவைகள் கஞ்சி, ரஸ்க், சூப், முட்டை ஆகியவற்றை உண்ணப்பழகிவிடும். பொரியரிசி மாக்கலவையை தினமும் இரண்டு முறை கொடுக்கலாம். (தொடரும்)

## மட்டு. நகர் பகுதி சல்லடைபோட்டு தேடுதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் உள்ள புளியந்தீவுப் பகுதியை சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து சல்லடை போட்டு தேடுதல் நடாத்தியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்படி பகுதிக்கு விரைந்து வந்த நூற்றுக்கணக்கான படையினர் அப்பகுதியில் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடாத்தினர். அங்குள்ள ஆண்கள் அனைவரையும் கோவிந்தன் வீதியில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். அத்துடன் தனியார் கல்வி நிலையத்தில் வகுப்புகளில் இருந்த மாணவர்களும், வீதியால் சென்று கொண்டிருந்தவர்களும், மேற்படி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட அனைவரும் அங்கு வைத்து தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இவர்களில் இளைஞர் ஒருவர் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

## சுகாதார பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தீவிரமாக பரவிவரும் நோய்களை ஒழிப்பதற்கு தற்போது யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த வெள்ளி தொடக்கம் சுகாதாரப் பகுதியினர் நல்லூர்ப்பகுதியில் அமைந்துள்ள வீடுகளில் நேரடியாகச் சென்று மக்களுக்கு நோய்க்காவிகளைத் தடுக்கும் வழிகள் சுகாதாரத்தைப் பேணுதல் போன்ற அறிவுரைகளை வழங்கி வருகின்றனர்.

யாழ். மாநகரசபைப் பகுதி உட்பட மேலும் பல இடங்களுக்கு இப்பிரசாரங்களை மேற்கொள்ள இவர்கள் முன்வருவதாக தெரியவருகின்றது.

## ஓய்வூதியம் வழங்கப்படுகிறது

காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களின் மார்கழிமாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரையும் வழக்கம்பரையில் உள்ள தற்காலிக கிராமிய வங்கி காரியாலயத்தில் வழங்கப்படும் என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியொன்றை நடத்துவதற்கு ஹட்டன் நஷனல் வங்கி ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இப்போட்டியில் பங்கு பற்ற விரும்பும் பாடசாலைகளும், கழகங்களும் உடனடியாக இவ் வங்கியின் யாழ்ப்பாண கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது

## ஜோன் பொஸ்கோ ஆசிரியர்களுக்கு கௌரவிப்பும், பாராட்டும்

[யாழ்ப்பாணம்]

ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையும், அவர்களது தன்னலமற்ற உழைப்புத்தான் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சையில் யாழ் சென்.ஜோன் பொஸ்கோ மாணவர்களின் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளுக்குக் காரணமாகும். என்று அருட்செல்வி ஜெரோம் கூறினார்.

ஜோன் பொஸ்கோ ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வகையில் இடம்பெற்ற பெற்றோர் ஆசிரியர் ஒன்றுகூடல் வைபவத்தில் பேசும் போதே ஜோன் பொஸ்கோ அதிபர் அருட்செல்வி ஜெரோம் இவ்வாறு கூறினார். விழாவிற்குத் திரு தேவநாயகம் தலைமை தாங்கினார்.

புலமைப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு காரணமாகவிருந்த ஐந்தாம் ஆண்டு ஆசிரியர்களான திருமதி கலாவதி பிரகதீஸ்வரன், திருமதி இரகுநாதன், திருமதி கணேசலிங்கம், திருமதி மகேந்திரநாதன், திருமதி வீராசாமி, திருமதிஆரோக்கியநாதன், கல்லூரி அதிபர் ஆகியோர் பெற்றோர்களால் தங்கப் பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய ஆசிரியர்களுக்கு பரிசில்கள் பெற்றோர்களால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் பாடசாலை சிற்றூழியர்களுக்கும் பரிசு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## குளங்கள் நிரம்பின

(வவுனியா)

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் வன்னிப் பகுதியில் உள்ள அனைத்துக் குளங்களும் தண்ணீரால் நிரம்பியுள்ளன.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக இப் பகுதிக் குளங்கள் தண்ணீரால் நிரம்பி, மேலதிக தண்ணீர் 'கலிங்கு' ஊடாக சிற்றாறுகளில் ஓடுவதை அவதானிக்க முடிகிறது. (தி)

ஈழநாதம்

# இனப்பிரச்சினை தீர்வு தொண்டா நிலைப்பாடு மாற்றம்?

## கொழும்பு பத்திரிகை தகவல்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அமைச்சர் தொண்டமான் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளார் என கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக உரத்த குரலில் பேசிவந்த அமைச்சர் தொண்டமான் தற்போது பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் சிபாரிசுகளோடு இணங்கிப் போக வேண்டும் எனக் கூறி வருவதாகவும், இதற்கு அவரது கட்சிக்குள் எழுந்துள்ள நெருக்கடியும் காரணமாகும் எனவும் தெரியவருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருப்பது மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கவேண்டும் என்றும், ஐந்து சிங்கள அரசியல் கட்சிகள் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக கொண்டுள்ள கருத்திசைவுடன் ஒத்துப் போகவேண்டும் என்றும் கூறிவருவதாகவும் மேலும் தெரியவருகிறது.

வடக்கு கிழக்கிற்கு தனித்தனியான இந்திய மாநிலங்களின் அதிகாரங்களை ஒத்த தீர்வை வழங்குவதே இந்த ஐந்து சிங்கள அரசியல் கட்சிகளின் திட்டமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தெரிவுக்குழுவின் தீர்வு ஏகமனதாக இருக்கவேண்டும்

**- செல்லச்சாமி**

(கொழும்பு)

'இனப் பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்வைக்கும் தீர்வு வாதங்களுக்கு இடமளிக்கக் கூடாது சிறுபான்மையினரும் பெரும்பான்மையினரும்விவாதமின்றி ஏற்றுக்கொள்ளும் தீர்வாக இருக்க வேண்டும்'. இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், கைத்தொழில் ராஜாங்க அமைச்சருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

# வட- கிழக்கு இணையாததீர்வு தமிழர் ஏற்கமாட்டார்

**-கணேசலிங்கம்**

(கொழும்பு)

வடக்கும் கிழக்கும் இணையாத எந்தத் தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளர் கே. கணேசலிங்கம் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்குப்பிரச்சனைக்குத் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு அதன் குழப்பமான இடைக்கால அறிக்கையை வெளியிட்ட பிறகே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேமன் கவியின் நூல் வெளியீட்டு விழா சென்ற வாரம் கொழும்பு ஓறியன்ட் ஹோட்டலில நடந்த போது அவ் விழாவில்பேசிய கணேசலிங்கம் வடக்கும் கிழக்கும் இணைந்த தீர்வுத்திட்டம் மிக விரைவில் வெளிவரும் என்றார்.

வடக்கு - கிழக்கு இணைப்பைத் தீவிரமாக எதிர்க்கும் வர்த்தக வணிகத் துறை அமைச்சர் ஏ ஆர் மன்சூரும் அதே மேடையில் உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு நகரில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

கூட்டம் அதிகமாகக் காணப்...

## முதலுதவி பயிற்சி

(கொழும்புத்துறை)

யாழ். மாநகராட்சி மன்றத்தின் சுகாதாரப் பகுதியினால் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய உதவியுடன் நடாத்தப்படும் விடுமுறை முதலுதவிப் பயிற்சி வகுப்புகள் 23-ம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளன.

இதில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்கள், பாடசாலை மாணவத் தலைவர்கள், உயர்தர மாணவர்கள் பாடசாலை அதிபர் அல்லது ஆசிரியர் சிபார்சுடன் யாழ். கச்சேரிக்கு அண்மையில் அமைந்திருக்கும் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன், 23-ம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (24)

## தற்கொலை

கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கடமையின்போது தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துள்ளார். கடந்தசனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது மெண்டிஸ் (வயது26) என்ற பொலிசாரே இவ்வாறு தற்கொலை செய்துள்ளார்.

# இணைப்பு கோரிக்கை கைவிடப்பட வேண்டும்

**-சபாநாயகர் முகமட்**

''வடக்கு-கிழக்கு இணைப்பைத் துண்டிப்பதற்கு தமிழ்க் கட்சிகள் இணங்க வேண்டும்''. இவ்வாறு சபாநாயகர் திரு. முகமட் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ்ப் பேசும் மக்கள் அமைதியாகவும், சந்தோஷமாகவும் வாழவேண்டுமானால் வடக்கையும் கிழக்கையும் துண்டிப்பதற்கு சகல தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் இணங்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தெரிவுக்குழு முடிவு டில்லியுடன் ஆலோசனை

## ஈ.பி.ஆர்.எல்.எப் முயற்சி

(கொழும்பு)

சிறிநிவாசன் யோசனைகளுக்கு பலத்த ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ள ஈ.பி. ஆர். எல். எப் அமைப்பின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கே. பிரேமச்சந்திரன் அவசரப் பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா பயணமாகியுள்ளார். அவர் சென்னைக்கு சென்றிருப்பதாகவும் பின்னர் புதுடில்லிக்கு சென்று அதிகாரிகளுடன் பாராளு மன்ற தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக பேச இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதேவேளை முன்னாள் முதல்வர் வரதராஜபெருமாளையும் அவர் சந்திக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது

தெரிவுக்குழுவை

யிலுமோ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமிழ்க் குழுக்...

## இராணுவம் அட்டூழியம்

# மட்டக்களப்பு கிராமங்களில் 15 பேர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பல கிராமங்களைச் சுற்றிவளைத்தசிறிலங்கா இராணுவத்தினர் 15 இற்கும் மேற்பட்ட பொது மக்களைச் சுட்டுக் கொன்றதுடன் பலரைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

கடந்த பதினோராம் திகதி அதிகாலை உலங்கு வானூர்திகளின் உதவியுடன் வவுனதீவு, ஆயித்தியமலை 19-ம்கட்டை 36ஆம் கிராமம், வெல்லாவெளி, பழுகாமம், கொக்கட்டிச் சோலை சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்துவெளியேறிய இராணுவத்தினரே இக் கொடூரச் செயல்களில் ஈடுபட்டனர்

இத் தேடுதல் நடவடிக்கையின் போது பத்திற்கு மேற்பட்ட பொதுமக்களைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

இவர்கள் பல வீடுகளையும், கடைகளையும் முத்துமாரி அம்மன் ஆலயம் என்பவற்றையும், உழவு இயந்திரங்கள் என்பவற்றையும் தீக்கிரையாக்கினர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்ததென இதுவரை தெரியவில்லை.

இதேவேளை தண்டவெளி 40 ஆம் கிராமம் அம்பிலாந்துறை 10 1/2 கட்டை ஆகிய இடங்களில் முகாம் அமைத்து அடாவடித்தனங்களை மேற்கொண்டுவருவதால் அங்குள்ள மக்கள் அதிகளவாக வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

# ஜனாதிபதி தேர்தல் ஏப்ரலில் இடம்பெறலாம்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்த ஆர். பிரேமதாசா முடிவு செய்து இருப்பதாக ஜனாதிபதி வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாக 'ராவய' செய்தி வெளியிட்டுள்ளது.

அனேகமாக ஏப்பிரல் மாத ஆரம்ப வாரத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் நடைபெற இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கின்றது.

இத்தேர்தலில் ஐ. தே. கட்சியை எதிர்த்து போட்டியில் ஈடுபடுத்த ஒரு பொது வேட்பாளரை நிறுத்த முடியாது எதிர்க்கட்சியினர் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவுவதாகவும் எதிர்க் கட்சிகளிடையே பிளவு அதிகரித்து கட்சி அங்கத்தினர் வேறு கட்சிகளுக்கு தாவும் நிலை ஏற்பட்டுள்ளதால் இதுவே ஜனாதிபதி தேர்தலுக்கு தகுந்த நேரம் என ஜனாதிபதி கருதுகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே தான் 1995 ஜனவரி 4 ஆம் திகதிவரை தற்போதைய ஜனாதிபதி பதவிவகிக்க முடியுமானாலும் தேர்தலை துரிதப்படுத்த இவர் விரும்புவதாக தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளை

திட்டமிடப்பட்ட அரசியல் நடவடிக்கையின் மூலம் அரசைப் பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்திப்பது புலிகளின் பிரதான நோக்கமாக அமையும் என்று அவர் மேலும் குறிப்பிடுகிறார்,

பாரிஸ்

இதேவேளை நீண்ட காலத்திற்கு யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு மனித சக்தியையும் யுத்த தளபாடங்களையும் பெறுவது இயலாத காரியம் என சிறிலங்கா ஜனாதிபதி கருதுவதாகவும் எனவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை தாமே தீர்மானிப்பதென சிறிலங்கா ஜனாதிபதி முடிவெடுத்துள்ளதாகவும் 'யுக்திய' சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிக்கு நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது;

''வடக்கு கிழக்கு பிரச்சி...

சுதந்திர வர்த்தக வலயம்

# வெளியேறப் போவதாக முதலீட்டாளர் அச்சுறுத்தல்

[கொழும்பு]

சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள தொழிற்சாலைகளில் தொழிலாளர் குழப்பம் அதிகரித்து வருவதால் அந்நிய முதலீட்டாளர் நாட்டைவிட்டு வெளியேறப் போவதாக அச்சுறுத்தி உள்ளார்கள்.

சுதந்திர வர்த்தக வலயத் தொழிற்சாலைகளில் தொடர்ந்து இடம்பெறும் தொழிற் தகராறுகளினால் தமது வாடிக்கையாளருக்கு உரிய நேரத்தில் பொருள்களை வழங்க முடியாத நிலை உருவாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புகளில் தங்கியிருக்கும் முதலீட்டாளர் சந்தை வாய்ப்புகளை இழக்கும் பட்சத்தில் தொழில் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்படலாம் என்றும் முதலீட்டாளர் தரப்பில் சொல்லப்படுகிறது.

அண்மைக் காலங்களில் சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தங்கள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# தினமும் மூன்று பேர் ராணுவத்தில் தற்கொலை

சிறிலங்கா இராணுவத்தில் தினசரி மூன்று பேராவது தற்கொலை செய்து கொள்கின்றனர் என்றும், மேலும் அதே அளவு எண்ணிக்கையானோர் தம்மைத்தாமேசுட்டுக் காயப்படுத்திக் கொள்வதாகவும் சிங்களப் பத்திரிகையான ராவயசுட்டிக்காட்டியுள்ளது.

# போர்த்துக்கல் விமான விபத்து 320 பயணிகள் பலி

போர்த்துக்கல்லில் நடைபெற்ற விமான விபத்தொன்றில் 320 பயணிகள் கொல்லப்பட்டனர்.

விமானம் தரையில் தட்டி விபத்துக்குள்ளானது.

டொச்சு விமானம் ஒன்றே இவ்வாறு பயணிகளுடன் விபத்...

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள பாட டார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளர் கே. கணேசலிங்கம் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழு அதன் குழப்பமான இடைக்கால அறிக்கையை வெளியிட்ட பிறகே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு ஒறியன்ட் ஹொட்டலில நடந்த போது அவ் விழாவில்பேசிய கணேசலிங்கம் வடக்கும் கிழக்கும் இணைந்த தீர்வுத்திட்டம் மிக விரைவில் வெளிவரும் என்றார்.

வடக்கு - கிழக்கு இணைப்பைத் தீவிரமாக எதிர்க்கும் வர்த்தக வணிகத் துறை அமைச்சர் ஏ ஆர் மன்சூரும் அதே மேடையில் உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு நகரில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

நத்தார் பண்டிகை காலத்தையொட்டி கொழும்பு நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பாதுகாப்பு நடவடிக்கையின் ஒருகட்டமாக இதுவரை சுமார் 700 பேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகரில் மக்கள் கூட்டம் அதிகமாகக் காணப்படும் இக்காலப் பகுதியில் அமைதியையும் ஒழுங்கையும் பேணும் நோக்குடன் மேற்படி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பலமுறை குற்றம் புரிந்தவர்கள், விசமிகள், சந்தேகநபர்கள் ஆகியோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மேற்படி பண்டிகைக் காலம் முடிவடையும் வரைக்கும் தொடர்ந்து தடுத்து வைக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

சமஷ்டியை

விடுதலைப் புலிகளும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களின் உதவியுடன் வெளியிடப்பட்ட சமஷ்டி அமைப்பைபற்றி சகலரும் கட்சி வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக சிங்கள மக்களை ஒன்று திரட்ட வேண்டும் என பேலும் சிங்கள பெளமுனு முன்னணி தெரிவித்துள்ளது.

சகல அமைச்சர்களுக்கும், கட்சி உறுப்பினர்களுக்கும் இவ் முன்னணி இது தொடர்பாக கடிதம் எழுதியுள்ளதாக தெரியவருகின்றது.

## விஸா பெற சிபார்சு செய்ய அதிகாரிகளுக்குத் தடை

(கொழும்பு)

வெளிநாட்டு விஸாக்களைப் பெறுவதற்கு அரச உயர் அதிகாரிகளும், அமைச்சர்களும் சிபார்சுக் கடிதங்களை கொடுக்கக் கூடாது என்று அரசு எச்சரித்துள்ளது.

வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் தெரிவித்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை.

சிபார்சுக் கடிதங்களைக் கொடுத்து விஸாக்களை எடுக்க உதவ வேண்டாம் என்று முன்பு பணிப்புரை வழங்கியும் கூட அதற்கு அதிகாரிகள் செவிசாய்க்காமலே இருந்து வருகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது


## சிவபதமடைந்த செய்தி
## இராசையா மீனாட்சி
(கல்வயல்)

கல்வயலைச் சேர்ந்த இராசையா மீனாட்சி அவர்கள் 21-12-92 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற இராசையாவின் துணைவியாரும், பாலசிங்கம், வேல்முருகு, கிருஷ்ணசாமி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற ஞானாம்பிகை, சரோஜினிதேவி, வனிதாமணி, கமலாதேவி ஆகியோரின் மாமியாரும், அமிர்தாம்பிகை, பாலகுமாரி, செவ்வேள், சிவகங்கை, மதினி சுரேசன், ஐங்கரன், ராகுலன், சுபாசினி, நாமகள் ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை [22-12-92] இன்றுகாலை 10.00 மணிக்கு நடைபெறும்.

கல்வயல், சாவகச்சேரி. [3368]

தகவல்: மகன்



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# தெரிவுக்குழு முடிவு டில்லியுடன் ஆலோசனை

## ஈ.பி.ஆர்.எல்.எவ் முயற்சி

(கொழும்பு)

சிறிநிவாசன் யோசனைகளுக்கு பலத்த ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் பொதுச்செயலாளரும் பாராளுமன்றஉறுப்பினருமான கே. பிரேமச்சந்திரன் அவசரப் பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா பயணமாகியுள்ளார். அவர் சென்னைக்கு சென்றிருப்பதாகவும் பின்னர் புதுடில்லிக்கு சென்று அதிகாரிகளுடன் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக பேச இருப்பதாகவும் கூற படுகிறது. இதேவேளை முன்னாள் முதல்வர் வரதராஜபெருமாளையும் அவர் சந்திக்கக் கூடுமென எதிர்பார்க்கபடுகிறது

தெரிவுக்குழுவை

யிலுமோ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமிழ்க் குழுக்களுடன் பேசுவதன் மூலமாகவே விடுதலைப்புலிகள் இந்த அரங்கில் பிரவேசிப்பதை தடுக்க முடியும். பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இத்தமிழ்க் குழுக்கள் தொடர்ந்து நீடிக்குமவரை விடுதலைப் புலிகள் வருவது தவிர்க்கப்படலாம். இதற்காகவே புலிகளின் ஆதரவாளர்கள் பாராளுமன்றத்தையும், தெரிவுக் குழுவையும் பறக்கணிக்க வேண்டுமெனக் கோருகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவ்விமர்சனத்தில் அவர் குறிப்பிடுகையில்;

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் முஸ்லிம் குழுக்களுடன் ஒரு இணக்கப்பாடடிற்கு வரத் தவறியதன் மூலம் நிபந்தனையற்ற முறையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பதில் தோல்வியைக் கண்டுவிட்டனர். எனவே வடக்கு - கிழக்கு இணைப்பு என்பதை இப்போதைக்கு மறந்துவிட்டு கூடுதல் அதிகாரங்களைப்பெற முயற்சிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் வடக்கு - கிழக்கு இணைப்பை வலியுறுத்துவதன் மூலம் அவர்கள் தமது பாதுகாப்பான இடத்தை இழக்க நேரிடும் என்றும், கொழும்பு அல்லது இந்தியாவில் அவர்களுக்கான தளம் இல்லாத போது விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை அவர்களால் தொடர்ந்து நடத்த முடியாதுபோகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் புலிகளுடன் பேசுவதன் மூலமே நிரந்தரத் தீர்வு காணமுடியும் என்று சில சிங்களவர்கள் கருதுவது ஆபத்தானதாகவே இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## உணவு முத்திரை விநியோகம்

வேலணைக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான 1992 ஆம் ஆண்டு ஐப்பசி மாத மதிய உணவு முத்திரை விநியோகிக்கப் படுகிறது. பாடசாலை மாணவர்கள் தத்தம் பாடசாலை அதிபர்களைச் சந்தித்து இம் முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

புலிகளுடன்

ஆலோசகர்களில் ஒருவரென வர்ணிக்கப்படுபவரும் கலைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணசபையின் முன்னாள் அமைச்சருமான தயான் ஜயதிலக்க, அநுருத்த திலகசிறி என்னும் பெயரில் எழுதியுள்ள மேற்படி கட்டுரையில் மேலும் குறிப்பிடுகையில்

இராணுவத்திற்குள் குழப்பத்தை ஏற்படுத்த எதிரணியினர் எடுக்கும் முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவது மேலும் வாய்ப்புகளை அளிக்கும் எனவும், மேற்கு நாடுகளிடமிருந்து கிடைக்கும் நெருக்குதல்கள் மூலம் சமாளிசது விட முடியாதளவுக்கு இந்திய எதிர்ப்புவாதமும், புலிகள்எதிர்ப்பு வாதமும் பலம் பெற்றுவிடும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அனுப்புவதில்

செயலாளர்கி ஆயோரும் பணிப்பாளர் திரும்பியதைத் தொடர்ந்து தமது விண்ணப்பங்களைக்கையளிக்க முடியாது ஏமாற்றமடைந்ததாக தெரிய வருகிறது.

பிடுகிறார்,

பாரிஸ்

இதேவேளை நீண்ட காலத்திற்கு யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு மனித சக்தியையும் யுத்த தளபாடங்களையும் பெறுவது இயலாத காரியம் என சிறிலங்கா ஜனாதிபதி கருதுவதாகவும் எனவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை தாமே தீர்மானிப்பதென சிறிலங்கா ஜனாதிபதி முடிவெடுத்துள்ளதாகவும் 'யுக்திய' சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிக்கு நெருங்கிய வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது;

''வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு இராணுவ ரீதியாக தீர்வுகாண இராணுவத்திற்கு கொடுக்கப்பட்ட கால எல்லை முடிவடைந்து விட்டது. இனியும் தொடர்ந்து யுத்தத்தை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பிரச்சினைக்கு தீர்வுகாண இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இழுபறியில் உள்ளன.

எனவே இரண்டு வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே இடம்பெற்ற பேச்சுக்களின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது'' என குறிப்பிடடுள்ளது

மேலும்; ''தமிழ் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களிடையே ஒற்றுமை காணப்படாது தெரிவுக்குழு அமர்வுகள் முடிவடைந்து விட்டன இதனால் தீர்வுக்கான முயற்சிகளில் தான் முன்னின்று ஈடுபட ஜனாதிபதி முன்வந்துள்ளார்.''

''விடுதலைப் புலிகளினால் தெரிவிக்கப்பட்டுள்ள யுத்த நிறுத்தம் தொடர்பாக அரசாங்கத்திற்கும் இராணுவத்தினருக்கும் இடையே பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. யுத்த நிறுத்தம் வருவது சாத்தியப்படாது போனாலும் முன்னர் நடைபெற்ற அடிப்படையிலான பேச்சுவார்த்தை யாவது நடைபெறும் சாத்தியம் உள்ளது

''சர்வகட்சி மாநாடு தெரிவுக்குழு போன்றவற்றினால் இனியும் பலன்கிடைக்கப்போவதில்லை என ஜனாதிபதி கருதுகிறார். எனவே இதற்கான சகல முடிவுகளையும் தானே மேற்கொள்வார் ''

''அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க. அபேட்சகராக பிரேமதாசா போட்டியிடவுள்ளார் அப்போது வடக்கு கிழக்கில் தேர்தல் சுமுகமாக நடத்தக்கூடிய விதத்தில் தீர்வு இருக்க வேண்டும் என்பதே பிரேமதாசாவின் விருப்பம்'' என அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

...தகராறுகளினால் தமது வாடிக்கையாளருக்கு உரிய நேரத்தில் பொருள்களை வழங்க முடியாத நிலை உருவாகும் ... திக் உள்ள தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தங்கள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## தினமும் மூன்று பேர் ராணுவத்தில் தற்கொலை

சிறிலங்கா இராணுவத்தில் தினசரி மூன்று பேராவது தற்கொலை செய்து கொள்கின்றனர் என்றும், மேலும் அதே அளவு எண்ணிக்கையானோர் தம்மைத்தாமேசுட்டுக் காயப்படுத்திக் கொள்வதாகவும் சிங்களப் பத்திரிகையான ராவயசுட்டிக்காட்டியுள்ளது.

## போர்த்துக்கல் விமான விபத்து 320 பயணிகள் பலி

போர்த்துக் கல்லில் நடைபெற்ற விமான விபத்தொன்றில் 320 பயணிகள் கொல்லப்பட்டனர்.

போர்த்துக்கல்லின் தென் பகுதியில் உள்ள விமான நிலையம் ஒன்றில் தரையிறக்க முற்பட்ட போது அங்கு பனிப்புகார் மூடியிருந்ததால் அவ் விமானம் தரையில் தட்டி விபத்துக்குள்ளானது.

டொச்சு விமானம் ஒன்றே இவ்வாறு பயணிகளுடன்விபத்துக்குள்ளானதாகும் இதில் இறந்தவர்களின் சடலங்களை மீட்கும்பணி நடைபெறுகிறது

மேஜர் ஆசீர்

திறமைமிக்க ஓர் வீரனாகத் திகழ்ந்தார். யாழ் குடாநாட்டில் உதைப்பந்தாட்ட இரசிகர்களின் மனதினை வென்ற ஓர் வீரன்.

இந்த ஆண்டில் விடுதலைப் புலிகளும், கடற் புலிகளும் இணைந்து கட்டைக்காடு, கட்டுப்பத்த ஆகியஇடங்களில் மேற்கொண்ட பாரிய தாக்குதல்களில் கடற்புலிகளின் தாக்குதல் அணியில் இரண்டாவது பொறுப்பாளராக படையை வழிநடத்தியதோடு பாரிய ஆயுதங்களையும் கைப்பற்றுவதற்கு பெரிதும் உழைத்தவர். இறுதியாக மன்னாரில் உயிலங்குளத்தில் ஏற்பட்ட நேரடிமோதலில்வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள்தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.


## மரண அறிவித்தல்
## திருமதி இராஜேஸ்வரி பிறைசூடி [பவா]

சிறாம்பியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி இராஜேஸ்வரி பிறைசூடி (பவா) 20-12-92 இல் கொழும்பில் காலமாகி விட்டார் இவர் பிறைசூடியின் (வசந்தன்) அன்பு மனைவியும், பிரதீபா, தர்சிகா, கண்டீபன், கம்சநதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

62, செட்டித்தெரு
நல்லூர்
யாழ்ப்பாணம்.

தகவல்
கலா (தங்கை)
(3833)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

21.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7189

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

இல்லை

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-7360, 27-7740, 26-6796, 22-5857, 24-4282, 24-1205, 24-9758, 26-8497, 24-4854, 27-1542, 28-2657, 22-5622, 24-5092, 27-5535, 24-4504, 24-9609, 24-6699, 26-9158, 27-922, 26-8878, 26-6745, 26-4376, 28-1049, 41-5417, 24-4747, 27-9090, 27-9707